# மனநோயாளரின் உரிமைகளுக்காக வாதாடும் அலுவலகம்

தகவல்களுக்கான வழிகாட்டி

**மனித உரிமை விண்ணப்பங்கள்:**
**பாகுபாடும் இம்சைப்படுத்தலும்**

> ***அறிவுறுத்தல்:*** **இந்த வழிகாட்டி பொதுவான தகவல்களை மட்டுமே கொண்டுள்ளது. உங்கள் நிலமையை குறித்த சட்ட சம்பந்தமான அறிவுரை அல்ல. உங்களது பிரத்தியேக நிலமையை குறித்து ஆலோசிப்பதற்கு நீங்கள் ஒரு வழக்றிஞர் அல்லது சட்ட ஆலோசகரின் ஆலோசனையை நாடுங்கள்.**

***மனித உரிமை கோட்பாடு என்றால் என்ன?***

- ஒன்ராறியோவின் *மனித உரிமை கோட்பாடு* (*கோட்பாடு*) ஒரு முக்கிய சட்டமாகும். அது ஒன்ராறியோவில் வசிக்கும் ஒவ்வொருவரும் பாகுபாட்டையும் இம்சைப்படுத்தலையும் உணராதவாது பாதுகாக்கின்றது. ஒன்ராறியோவில் உள்ள ஏனய சட்டங்கள் அனைத்துமே இக்கோட்பாட்டிற்கு இசைந்ததாக இருத்தல் வேண்டும்.

- ஆனி 30, 2008ல் இருந்து ஒன்ராறியோவில் ஒரு மனித உரிமை சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை சபை இனிமேலும் ஒரு தனிநபரின் மனித உரிமை முறைப்பாட்டை விசாரிப்பதில்லே. அதற்காக எல்லா விதமான விண்ணபங்களும் நேரடியாகவே மனித உரிமை நியாய சபையிடம் விண்ணப்பிக்கப்படும். பாகுபாட்டினால் பாதிப்படைந்தோர் தமது விண்ணபங்களை முறையீடு செய்வதற்கான உதவிகளை வழங்க ஒரு புதிய மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம் செயலில் உள்ளது,

- இந்த கோட்பாட்டினை அமுல்படுத்தி அதை மதித்து நடைமுறைப்படுத்துவதே **ஒன்ராறியோ மனித உரிமை நியாய சபையின்** (நியாய சபை) பொறுப்பாகும்.

- உங்கள் இனம், பால், பாலியல் வெளிப்பாடு, நிறம், பரம்பரை, பூர்வீகம், இனத் தோற்றம், விவாக அந்தஸ்து, (சேர்ந்து வாழ்தல், விவாகரத்து அல்லது பிரிந்து வாழ்வோரும் இதனுள் அடங்கும்) வயது, இயலாமை, குடிஉரிமை, குடும்ப நிலை அல்லது சமயம் காரணமாக வேற்றுமை அல்லது இம்சைக்குள்ளானீர்கள் என நம்பினால் நியாய சபையிடம் விண்ணப்பிக்கலாம். மேலும் சமூக நிதி உதவி பெறுவதன் காரணமாக உங்களுக்கு வதிவிடம் வழங்கபடாத பாகுபாட்டை அனுபவித்திருந்தாலும் அல்லது வேலை இடத்தில் உங்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்ட குற்றம் காரணமாக நீங்கள் பாதிப்பை உணர்நதிருந்தாலும் நீங்கள் விண்ணப்பம் செய்யலாம். இவைகளே இக் கோட்பாட்டின் "தடைசெய்யப்பட்ட காரணங்கள்" என அறியப்பட்டுள்ளன.

மனித உரிமையை பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். நம் ஒவ்வொருவருக்கும் இன்னொருவரது மனித உரிமையை மதித்து நடப்பது மட்டுமல்லாமல் எமக்கும் மற்றுவர்களுக்கும் எதிராக இணைக்கப்படும் பாகுபாட்டிற்கும், இம்சைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கும் உத்தரவாதமும் உண்டு.

### *பாகு பாடு என்றால் என்ன?*

- இக் கோட்பாட்டின் படி ஏதாவது குணாதிசயத்திற்காகவோ அல்லது எண்ணத்தில் கொண்ட குணாதிசயத்திற்காகவோ ஒருவரை தகாத முறையில் நடத்துவது, சலுகைகளை மறுப்பது, புறக்கணிப்பது, சுமத்தப்பட்ட பொறுப்பு, அசௌகரியப்படுத்தல் ஆகியனவாகும். பாகுபாட்டை நிரூபிப்பதற்கு காரணம் தேவையில்லை.

- உங்கள் வேலையில், வசதிகளும் சேவைகளும் பெறும் இடங்களிலும் (கடைகளில், உணவ சாலைகளில், போக்குவரத்து, மருத்துவ சாலைகள் பாடசாலைகள் ஏனைய பொது இடங்களிலும்) வதிவிடங்கள், ஒப்பந்நதங்கள், சங்கங்கள் அல்லது வேலை சம்பந்தமான ஸ்தாபனங்களில் அங்கத்துவம் வகுக்கையிலும் பாகுபாடும் இம்சையுமற்றவாறு இருத்தல் உங்கள் உரிமையாகும்.

### *இம்சைப்படுத்துவது என்றால் என்ன?*

- இம்சைப்படுத்தலும் ஒருவிதமான பாகுபாடாகும், இக் *கோட்பாட்டிற்கு* முரணாக தகாத நடத்தை, ஒன்றுக்கு அல்லது அதற்கு மேலான பாகுபாட்டிற்கு தடைவிதிக்கப்பட்ட காரணங்களுக்காக இளித்துரைத்தல் அல்லது அவமதித்தல் என்பன இவற்றுள் அடங்கும். தங்களது வார்த்தைகள் உங்களை கிலேசப்படுத்தும் என்று தெரிந்து கொண்டே சொல்லும் பொழுது இம்சை ஏற்படுகின்றது.

- இனத்துவேஷத்தை அடிப்படையாகக் கொண்ட பழித்துரைகள் அல்லது கேலிகள் என்பன இன அடிப்படையிலான இம்சைகளுக்கான உதாரணங்களில் அடங்கும். அருவருக்கத்தக்க பாலியல் படங்களை காட்டுதல் அல்லது தொடர்ந்து கண்வெட்டாமல் ஒருவரை பார்த்தல் அல்லது உங்கள் உடலைக் குறித்து சகிக்க முடியாயத வகையில் வர்ணித்தல் என்பன பாலியல் இம்சைக்கான உதாரணங்களில் அடங்கும்.

### *“மறைமுகமான பாகுபாடு” அல்லது “அமைவான பாகுபாடு” என்பது என்ன?*

- பாகுபாடு இன்னொருவருக்கூடாக இழைக்கப்படும் பொடுது அது மறைமுகமான பாகுபாடாகும். ஒரு வதிவிடச் சொந்தக்காரர் தனது மேற்பார்வையாளரிடம் பிள்ளைகள் உள்ளவரையோ அல்லது இயலாமை உற்றவரையோ வாடகைக்கு அமர்த்தவேண்டாம் என்று கேட்பது மறைமுகமான பாகுபாட்டின் ஒரு உதாரணம் ஆகும்.

- கொள்கைகள் அல்லது வழக்கிலிருந்துவரும் செயல்பாடுகள் வேண்டுமென்றோ அல்லது வெளியரங்கமாகவோ பாகுபாட்டினை வெளிப்படுத்தாவிடினும் இந்தக் *கோட்பாடினால்* பாதுகாக்கப்பட்ட ஒரு குழுவின் மீதோ அல்லது குழுக்கள் மீதோ பாகுபாட்டின் *தாக்கத்தை* எற்படுத்துவதாயிருந்தால் அது அமைவான பாகுபாடு எனப்படும். உதாரணமாக ஒரு தொழில் அதிபர் தம்மிடம் வேலை செய்யும் எவருமே மொட்டாக்கு அணியக்கூடாது எனற கொள்கை வைத்திருந்தால் அந்த தொழில் அதிபர் சமய காரணங்களுக்காக மொட்டாகணிபவர் மீது அமைவான பாகுபாட்டை இழைக்கின்றார்.

### *“இணங்கிப்போகுதல்.” அல்லது “அநாவசியமான செலவினாலேற்படும் கஷ்டம்” எனறால் என்ன?*

- ஒவ்வொரு தொழில் அதிபரும், வதிவிட சொந்தக்காரரும், சேவை வழங்குபவரும் (வைத்தியசாலை போன்றவை) நியாயமான அளவு தமது சட்டதிட்டங்களையும் வழக்கமுறைகளையும் ஒருவரின் தேவைக்கு இணங்கிப்போகும் வகையில் அதற்கிசைந்த மாற்று வசதி முறைகளை ஏற்படுத்துவன் மூலம் யாவரும் சமமான சேவைகளை பெற்றுக்கொள்ளும் வசதியை வழங்குவதே

  “இணங்கிப்போவதன் கடமை” எனபதாகும். இணக்கமான வசதிகள் என்பது ஒவ்வொரு தனி நபரின் தேவைக்கேற்ப மாறுபடும். சக்கரநாற்காலி செல்வதற்கான பாதை கட்டமைப்பு, வேலை நேரங்களிலும் இடைவேளை நேரங்களிலும் அதிகமான நெகிழ்ச்சி, காது கேட்காதோர் கூட்டங்களில் பங்குபெறும் வகையில் அவர்களுக்கு சைகை மொழிபெயர்ப்பு, அவர்களுக்கு உகந்தவாறு

வேலையை மாற்றியமைத்தல், திருப்பவும் பயிற்சிவழங்குதல் அல்லது இன்னொரு வேலையில் அமர்த்தல் என்பவை இணங்கிப்போவதற்கான செயல்முறையின் உதாரணங்களில் அடங்கும்.

- "அநாவசியமான செலவும் நிர்ப்பந்தமும்" ஏற்படாத பட்சத்தில் இணக்கமான செயல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அநாவசியமான செலவையும் நிர்ப்பந்தத்தையும் நிர்ணயிக்க மூன்று காரணிகளை கணக்கிலிடவேண்டும்: பெறுமதி, வேறு வகையில் நிதியுதவி கிடைக்குமா என்பதோடு சுகாதார பாதுகாப்பு சலுகைத் தேவைகள் என்பனவும் அடங்கும். தொழில் அதிபர் அல்லது சேவை வழங்குபவர் வசதிகளை அதிகரிப்பதற்கான குளியலறைக் கட்டுவதனால் ஏற்படும் செலவினை "அநாவசிய நிர்ப்பந்தந்தால் ஏற்பட்ட செலவு" என்று கோர முடியாது. அநாவசியமான செலவு தமது தொழிலுக்கு பங்கம் விளைவிக்கும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

### *மனநோய் ஒரு இயலாமையா?*

- ஆம். இக் *கோட்பாட்டின்* கீழ் மனநோய் ஒரு இயலாமையாகும். நீங்கள் வைத்தியசாலையில் உள்ள நோயாளி அல்லது நீங்கள் சுகவீனம் உற்றுள்ளீரகள் என்ற காரணத்திற்காக நீங்கள் பாகுபாட்டையோ அல்லது இம்சையையோ அனுபவிக்கக்கூடாது.

### *வேறு எந்த வகையில் இந்தக் கோட்பாடு என்னைப் பாதுகாக்கிள்றது?*

- நீங்கள் இக் *கோட்பாட்டிற்*கிணங்க உங்கள் உரிமையை நிலைநாட்டியதற்காக உங்களை வேறுபடுத்தி நடத்தினால் அது "பழிவாங்கல்" என்றாகும். பழிவாங்குதல் அல்லது பழிவாங்குவோம் என்ற மிரட்டலிருந்து இந்த *கோட்பாடு* உங்களை பாதுகாக்கிள்றது. மேலும் நீங்கள் இன்னொருவர் மீது பாகுபாட்டினை காட்ட மறுத்ததற்காகவோ அல்லது உங்கள் மீது ஒருவர் காட்டிய பாலியல் ஈடுபாட்டை நிராகரித்தற்காகவோ நீங்கள் பழிவாங்கப்படுவதிலிருந்தும் உங்களை பாதுகாக்கின்றது.

### *பாகுபாடு அல்லது இம்சைப்படுத்தலைக்குறித்து நீங்கள் என்ன செய்யலாம்?*

- நீங்கள் பாகுபடுத்தல் அல்லது இம்சைப்படுத்தலுக்குள்ளானால்:

  a) உங்களைத் தகாத முறையில் நடத்தியவரிடம் அவரது நடத்தை ஏற்கமுடியாதது என்பதைக் கூறுவதோடு அதனை நிறுத்தும் படியும் கேளுங்கள். இப்படி செய்வது உங்களுக்கு கடினாமக இருந்தால் ஒரு நண்பரை உங்களுடன் சேர்த்துக் கேளுங்கள்.

  b) உங்கள் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எழுத்தில் பதிவுசெய்யுங்கள்:

  - என்ன நடந்தது
  - எப்பொழுது நடந்தது
  - எங்கு நடந்தது
  - என்ன சொல்லப்பட்டது அல்லது செய்யப்பட்டது என்பதையும் எவர் என்ன சொன்னார் அல்லது செய்தார் என்பதையும்
  - எவர் நடைபெற்ற சம்பவத்தைக் கண்டார்கள்
  - நீங்கள் அந்த நேரத்தில் என்ன செய்தீர்கள்

  c) பாகுபாடு அல்லது இம்சைப்படுத்தல் வேலை இடத்தில் ஏற்பட்டிருந்து உங்களுக்கென்று தொழிற்சங்கம் இருக்குமானால் உங்களது தொழிற் சங்க பிரதிநிதியுடன் பேசுங்கள். நீங்கள் ஒரு மனநோய் பராமரிப்பில் நிலயத்தில் இருந்தால் உங்களது அறையில் உள்ள உத்தியோகத்தர் அல்லது நோயாளியின் உரிமைகளுக்காக வாதாடுபவரிடம் அந்த நிலையத்தில் பாகுபாட்டையும்

இம்சைப்படுத்தலையும் பிரத்தியேகமாக கவனத்திலெடுப்பதற்கு அவர்களின் விண்ப்ப வழிமுறைகள் என்ன என்பதை கேட்டறியுங்கள்.

- உங்களது பிரச்சனை கணக்கெடுக்கப்படவில்லை அல்லது தொடர்கிறது என நீங்கள் உணர்ந்தால் மனித உரிமை நியாயசபையிடம் மனித உரிமை கோரி விண்ணப்பிக்கலாம்.

***நான் எவ்வாறு மனித உரிமை நியாயசபையிடம் விண்ணப்பிக்கலாம்?***

- உங்களது இயலாமை அல்லது இனம் அல்லது *கோட்பாட்டில்* வரையறுக்கப்பட்ட ஏதாவது தடைவிதிக்கப்பட்ட காரணங்களுக்காக உங்களுக்கு பாகுபாடு அல்லது இம்சை ஏற்பட்டால் ஒன்ராறியோ மனித உரிமை நியாயசபையிடம் விண்ணப்பிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.

- மனித உரிமை விண்ணப்பங்களை நியாய சபை விசாரித்து அதற்கு தீர்வளிக்கிள்றது. சாதரண வழக்குமன்றத்தினைவிட இம்முறை மிகவும் விரைவானதாகவும் கட்டுப்பாடான விதிமுறைகள் குறைந்ததாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

- விண்ணப்பிக்கப்ட்ட விண்ணப்பங்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் தீர்வுவழங்கப்படும். எனினும் சம்பந்தப்பட்டவர்கள் இருவரும் சம்மதித்தால் இணக்கம் ஏற்படுத்துவதன் மூலமும் தீர்வைக் கண்டடையலாம்.

- **மனித உரிமை சட்ட ஆதரவு நியைலம்** உங்கள் விண்ணப்பத்தை மனுச்செய்ய உதவலாம். இந்த நிலயத்தின் மனித உரிமையில் விசேட தேர்ச்சிபெற்ற 22 வழக்கறிஞரும் சக ஊழியரும் உங்களுக்கு இலவச ஆலோசனைகளையும் சேவைகளையும் வழங்குவர். அவாகள் நியாயசபையிடமிருந்து தனிப்பட்ட முறையிலும் அரசாங்கத்திடமிருந்து விலகியுமே செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் உங்களுக்கு: வழக்கிற்க்கு வேண்டிய ஆலேசனைகள், உங்கள் விண்ணப்பத்தை பூர்த்திசெய்யவதில் உதவி, உங்கள் சார்பில் நியாயசபைக்கு எதிராக நீங்கள் விண்ணபித்திருந்த நபருடன்(களுடன்) அல்லது ஸ்தாபனத்துடன்(னுங்களுடன்) தொடர்பு கொள்ளவும் தேவைப்படின் உங்கள் சார்பில் இணக்கத்திற்காக அல்லது விசாரணைக்கு தயார்படுத்தவும் உதவுவாகள்.

***விண்ணப்பம்***

- பாகுபாடு ஏற்பட்ட திகதியிலிருந்த **ஒரு வருட காலதிற்குள்** உங்கள் விண்ணப்த்தை மனுச்செய்யவேண்டும். தொடர்சியாக பாகுபாடு ஏற்பட்டிருந்தால் கடைசியாக பாகுபாடு ஏற்பட்ட திகதியீலிருந்து விண்ணப்த்தை மனுப்பிக்கவேண்டும். தகுந்த காரணம் காட்டினால், அதாவது வைத்தியசாலையில் அல்லது சிறயைில் இருந்த காரணத்தாலோ அல்லது பாகுபாடு ஏற்பட்டது என்பதை ஒரு வருடம் சென்றபின்னரே நீங்கள் உணர்ந்தீர்கள் என்ற காரணத்திற்காகவோ நியாயசபை இந்த கால அவகாசத்தை நீடிக்கலாம்.

- நியாயசபை ஊழியர் உங்கள பெயர், விலாசம், உங்கள் தொலை பேசி எண் என்பவற்றையும் உங்கள் பத்திரங்களை தபால் மூலமோ, ஈ-மெயில் மூலமாகவோ அல்லது தொலைநகல் மூலமாகவோ பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்பவற்றையும் கேட்டறிந்துகொள்வர். உங்களுக்கு விண்ப்பப்படிவமும் வழிகாட்டியும் அடங்கிய தகவல்களை அனுப்பி வைப்பர். நியாயசபையின் கணணி-தளத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம் அல்லது அவர்கள் கணணி-தளதிலிருந்து நேரடியாயவே ‘‘ஸ்மாட் விண்ணப்ப பத்திரத்தை’’ உபயோகித்து கணதி-தளத்தினூடக விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பப் படிவத்தில் என்ன நடந்தது என்பதை விபரிக்க வேண்டும் ( யார், எப்பொழுது, என்ன, எங்கே என்பவற்றோடு) எவ்வாறு இந்நிகழ்சிகள் உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பதையும் என்ன விதமான நட்டஈடு அல்லது தீர்வை நாடுகிறீர்கள் என்பதையும் விபரிக்க வேண்டும். அதோடு நீங்கள் எதிராக விண்ணப்பிக்கும் (“எதிர்வாதி”என்று குறிக்கப்படும்) தனிநபரின்(களின்), ஸ்தாபனம், சேவை வழங்கும் நிலையம் அல்லது அரசாங்க இலாகா என்பவற்றின் பெயரை தெளிவாக இனங்கண்டுகொள்ளுமாறு கேட்கப்படுவீர்கள். மேலும் உங்களது விண்ணப்பத்திற்க்கு ஆதாரமான பத்திரங்களும் அதோடு சம்பவத்திற்கு சாட்சிகள் இருப்பின் அவர்களின் பெயர்களும் தெளிவாக குறிக்கப்படவேண்டும். சாட்சிகளின் பெயர் அட்டியல் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டு இருக்கும் அது எதிர்வாதிக்கு அனுப்பப்படமாட்டாது.

- நியாயசபை தனிப்பட்ட அந்தரங்கமான முறையிலான கொள்கையுடையது. சில வேளைகளில் பொதுவான பத்திரங்களில் உங்கள் பெயர் வெளிவராதவாறும் ஏற்பாடுகளை செய்கின்றது. உங்களது அந்தரங்கம் குறித்த உங்கள் கவலைகளை நீங்கள் நியாயசபைக்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் உங்கள் விண்ணப்பங்களை ஒரு வழக்கறிஞர் அல்லது ஊதியம் பெறாத சிநேகிதர் அல்லது இன்னொரு குடும்ப அங்கத்தவரூடாகவும் விண்ணப்பிக்கலாம். இதன் மூலம் உங்களது தனிப்பட்ட தொடர்பு தகவல்கள் யாவும் எதிர்வாதிக்கு சென்றடையமாட்டாது.

***நான் விண்ணப்பத்தை மனுச்செய்தபின் என்ன நடக்கும் ?***

- பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பம் நியாயசபைக்கு கிடைத்ததும் அது பூரணமாக்கப்பட்டதா என்பதையும் *கோட்பாட்டிற்கு* உள்ளடங்கியதா என்பதையும் நியாயசபை நிர்ணயிக்கும். உங்களது விண்ணப்பத்தில் ஏதாவது தவறுகள் இருந்தால் அதனை சரிப்படுத்தும் சந்தர்பம் உங்களுக்கு வழங்கப்படும்.

- உங்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நியாயசபை, உங்களது விண்ணப்பத்தின் பிரதியை எதிர்வாதிக்கு(களுக்கு) அனுப்பும். நியாயசபை (உங்கள் கோரிக்கைப்படி தொடர்புகளுக்கான மாற்று விலாசத்தையும் கொடுத்தால்) சாட்சிகளின் பெயர் பட்டியலையும் உங்களது பிரத்தியேகமான தொடர்பு விலாசத்தையும் நீக்கிவிடும். எதிர்வாதியிடம் பதில் உத்தரவு பத்திரத்தை நிரப்புமாறு வேண்டிக்கொள்ளும்.

- ஏதிர்வாதி தரும் எந்த தகவல்களுக்கும் பதிலளிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்படும்.

- தீர்வுக்கு மனுப்பித்த இருசாராருமே இணக்க விசாரணைக்கு ஒத்துப்போகலாம். நியாயசபையின் நடுத்தீர்வு வழங்குபவரே இதற்கு தலைமை வகிப்பார். இது நியாயசபை விசாணைக்கு போகுமுன் எதிர்வாதிக்கும் உங்களுக்கும் இடையிலான பிரச்சினைக்கு தீர்வைக் கண்டடையும் அந்தரங்கமான முயற்சியாகும்.

- இணக்க தீர்வு வெற்றி பெறாது போனால், நியாயசபை உங்களது விண்ணப்பத்தை குறித்த முடிவை கண்டுகொள்ள ஒரு விசாரணையை நடத்தும்.

### *எனது விண்ணப்பம் குறித்து நான் எங்கு உதவி பெறலாம் ?*

- விண்ணப்பம் செய்வதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், மனித உரிமை சட்ட ஆதரவு நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- உங்கள் சார்பாக பிரத்தியேகமான வழக்கறிஞரையோ, அல்லது ஊதியம் பெறாத நண்பரையோ அல்லது குடும்ப அங்கத்தவரையோ நீங்கள் தெரிந்து கொள்ளலாம். நீங்கள் குறைந்த வருமானத்தை உடையவராய் இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட வழக்கறிஞரை நியமிக்க விருப்பினால் நீங்கள் சட்ட உதவி பெற்றுக்கொள்ளும் தகமையும் பெறுவீர்கள்.

- உங்களது இணக்கவாதத்தில் அல்லது விசாரணையில் நீங்கள் முற்றிலும் பங்குபெறும் வண்ணம் நியாயசபை உங்களுக்கு மொழிபெயர்பாளரையோ அல்லத சைகை மொழி பெயர்பாளரையோ தந்து உதவும். மொழி பெயர்பாளர் அல்லது சைகை மொழி பெயர்பாளர் வேண்டும் என்ற விண்ணப்பம் நியாயசபையின் பதிவாளரிடம் இந்த செயல்பாடுகள் தொடங்கும் ஆரம்ப தருணத்திலேயே விண்ணபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### *நியாயசபை என்ன கட்டளையை பிறப்பிக்கலாம் ?*

- நியாயசபை நீங்கள் பாகுபாட்டை அல்லது இம்சைப்படுத்தலை உணர்ந்தவர் என்பதை கண்டுகொண்டால் எதிர்வாதியிடம்:
  - உங்களுக்கேற்பட்ட மான நட்டத்திற்கும், உங்கள் உணர்சிகளுக்கும் உங்கள் சுயமரியாதைக்கும் இழைக்கப்பட்ட "பொதுவான நட்ட ஈட்டை" செலுத்துமாறும்
  - அநீதியாக அதிகரிக்கப்பட்ட வாடகை அல்லது உங்களுக்கேற்பட்ட வருவாயின் இளப்புகளுக்காக "பொதுவான நட்ட ஈட்டை" பணம் மூலம் செலுத்துமாறும்

- பாகுபாடு ஏற்படாவிட்டால் நீங்கள் எந்த நிலமையில் இருந்திருப்பீர்ளோ அதே நிலையில் உங்களை இருத்துமாறு நியாயசபை எதிர்வாதியிடம் கட்டளை பிறப்பிக்கலாம். உதாரணமாக பாகுபாட்டின் காரணமாக நீங்கள் வேலை நீக்கப்பட்டிருந்தால் திருப்பவும் வேலையில் அமர்தும்படி நியாயசபை கட்டளை பிறப்பிக்கலாம்.

- மேலும் நியாயசபை பொதுநலத்தை கருத்தில் கொண்ட திருத்தங்களையும் அறிமுகப்படுத்தலாம். தொழில் அதிபர் அல்லது அரசாங்கம் தமது செயல்முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த அல்ல புதிய மனித உரிமைகளை அடக்கிய கொள்கைகளை உருவாக்க அல்லது எதிர்வாதி மனித உரிமை பயிற்சி பெற வேண்டும் என்ற கட்டளை பிறப்பித்தல் போன்றவை இவற்றில் சில. நீங்களும் உங்களது விண்ணபத்தில் இத்தகைய திருத்தங்களை வேண்டலாம்.

### *மனித உரிமை நியாயசபை எனது விண்ணப்பத்தை ஏற்க மறுக்கலாமா?*

- ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டத்திற்குட்பட்ட மனித உரிமை மனித உரிமை மனுக்களை மட்டுமே நியாயசபை விசாரிக்கலாம். அவை வேலை சம்பந்தமான, ஒப்பந்தங்கள், பொது போக்குவரத்து, வதிவிடம், சுகாதார, கல்வி அல்லது கடைகளும் உணவுச்சாலைகளும் சம்பந்தாமன விவாகரங்களை உள்ளடிக்கியனவேயாகும்.

- நியாயசபை உங்கள் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான காரணம்:

  - பாகுபாடு ஒன்ராறியோ மாகாணத்திற்கு வெளியே நடந்திருந்தால் (இருப்பினும் சில தருணங்களில் சட்டத்திற்கிற்கு மாறான தீர்வுகளும் உண்டு).
  - உங்கள் விஷயம் ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டத்திற்குள் அடங்காததாக இருக்கும்பட்சத்தில் அதாவது தேசமுழுதிலுக்குமான சட்டமாயிருந்தால். அவையாவன வானூர்தி மீதான பிரயாணம், வரையறுக்கபட்ட வங்கிகள், தெலைக்காட்சி வானொலி நிலையங்கள், தொலை பேசி நிறுவனங்கள், தேசாந்த அரசாங்க இலாகாக்களும், பகுதிகளும், அரசாங்க நிறுவனங்களளும் இவற்றுள்டங்கும். இவற்றைக் குறித்த குற்றச்சாட்டுகள் யாவும் *கனேடிய மனித உரிமை சட்டத்தின்* படி இயங்கி வரும் கனேடிய மனித உரிமை நியாயசபையிடம் மனுப்பிக்கப்பட வேண்டும். உதவிகளுக்கு கனேடிய மனித உரிமை சயையை கணணி தொடர்பு மூலம் http://www.chrc-ccdp.ca/ அல்லது தொலை பேசி மூலம் 1-888-214-1090 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.
  - நீங்கள் ஏற்கனவே வேறு முறையில் முறைப்பாடு செய்திருந்தால் உதாரணமாக பொது நியாயமன்றத்தின் மூலம், உங்கள் குறையை நிவர்த்தி செய்யும் தொழிற் சங்கம் மூலம், அல்லது வதிவிட உரிமையாளரும் வாடகையாளருக்குமான சபையூடாக. சில வேளைகளில் நியாயசபை மற்றய விசாரணை முடியும் வரையில் உங்கள் விண்ணப்பத்தை மாற்றவோ அல்லது தள்ளிப் போடவோ கூடும். மற்றய முறைப்பாடுகள் எவ்வாறு உங்களுக்கு சாதகமான வகையில் உங்கள் மனுவைக் கவனிக்கவில்லை என்பதற்கு விளக்கம் அளிப்பதற்கும் சந்தர்பம் வழங்கப்படும்.

- நீங்கள் ஏற்கனவே ஆனி 30, 2008ன் முன் “பழைய” மனித உரிமை சபையிடம் மனுச்செய்திருந்தாலம் நியாய சபை உங்கள் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

***நான் ஏற்கனவே மனித உரிமை நியாயசபைக்கு விண்ணப்பம் செய்திருக்கும் பட்சத்தில் எனக்கு வேறு ஏதாவது சட்ட வழிமுறைகள் உண்டா?***

- மனித உரிமை விண்ணப்பத்திற்கு பதிலாக அல்லது அதனோடு சோந்து செயல்பட வேறு சட்ட வழிமுறைகளும் உண்டு. இருப்பினும் உங்களது விண்ணப்பம் மற்றய வழிமுறைகளுக்கு தாக்கம் விழைவிக்கலாம். உங்களுக்குண்டான சிறந்த வழிமுறைகளைக் குறித்து உங்கள் வழக்கறிஞருடன் கலந்து ஆலோசியுங்கள்.

***நான் ஏற்கனவே மனித உரிமை சபையிடம் முறைப்பாடு செய்திருந்தால் என்ன நடக்கும் ?***

- நீங்கள் ஆனி 30, 2008ற்கு முன் மனித உரிமை முறைப்பாடு செய்திருந்து இன்னும் உங்கள் செயல்பாடுகள் முடிவடையாதிருந்தால் உங்கள் விண்ணப்பம் “பெயர்சியிலுள்ள விண்ணப்பம்” எனக்கருதப்படும் உங்களுக்கான தெரிவுகள்:
  - உங்கள் விசாரணையை தொடர்ந்த நடத்த மனித உரிமை சபையிடம் விட்டு விடலாம். மார்கழி 31, 2008 வரை சபை அதனை விசாரிக்கும்.
  - புதிய விதிப்படி நீங்கள் உங்கள் விண்ணப்பத்தை நியாய சபையிடம் மாற்றலாம். இம்மாற்றத்தை மார்கழி 31, 2008ன் முன் செய்ய வேண்டும். இந்த செயற்பாடு கட்டாய இணக்க விளக்கத்தை உள்ளடக்கும். ஆகவே சிக்கலான இருசாராரும் இணங்கமுடியாத அல்லது சாட்சியம் நிறைந்த விண்ணப்பங்களுக்கு இது சிறந்த முடிவு அல்ல.

- மார்கழி 31, 2008ன் பின், ஏற்கனவே இருந்து வரும் விண்ணப்பங்கள் யாவும் மாற்றப்படவோ புதிய சட்டப்படி ஆனி 30, 2009 க்கிடையில் விரைவான இணக்கத் தீர்கத்திற்குட்படுத்தப்படலாம். இந்த விண்ணப்பங்களுக்கு இணைவாக்கமான தீர்வுகள் வழங்கப்படும்.
- ஆனி 30, 2009க்கு, முன் குற்றச்சாட்டுகள் யாவும் நியாயசபைக்கு மாற்றப்பட வேண்டும் அல்லாவிடில் விண்ணப்பங்கள் தொடர்ந்து விசாரிக்ப் படமாட்டாது. உய்களது குற்றச்சாட்டு விண்ணப்பங்களை மாற்றுவது உங்கள் பொறுப்பாகும்.

- மாற்றத்திற்கான உதவிகளை பெற்றுக்கொள்ள, நீங்கள் நியாயசபை மாற்ற பதிவாளருடன் (416) 314-8419ல் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான தெரிவுகளைக் கண்டு கொள்ள: http://www.ohrc.on.ca/en/commission/mission/options/. என்ற கணணி–தளத்தை சென்றடையுங்கள்.

***உதவும் சில தொடர்புகள்***

- நியாயசபையை திங்கள் தொடக்கம் வெள்ளி வரை அலுவலக நேரங்களில் (416) 326-1519 (ரொறன்ரோவில்) அல்லது இலவசமாக 1-866-598-0322லும் தொடர்பு கொள்ளலாம். காது கேட்காதோர் தொலை பேசி தட்டச்சு தொடர்பு (416) 326-2027 (ரொறன்ரோவில்) அல்லது இலவசமாக 1-866-607-1240. மேலதிக தகவல்களை நியாயசபையின் கணணித்தளத்தின்: http://www.hrto.ca. என்ற விலாசத்தில் பெற்றக்கொள்ளலாம்.

*நியாய சபைக்கான புதிய விண்ணப்ங்களை சமர்ப்பிக்க:*

- றிச்சாட் ஹெனசி, பதிவாளர் Richard Hennessy, Registrar
  ஒன்ராறியோ மனித உரிமை நியாயசபை
  655 பே வீதி 14வது மாடி
  ரொரன்ரோ, ஒன்ராறியோ M7A 1X8

- அல்லது உங்கள் விண்ணப்பங்களை ஈ–மெயில் மூலம் HRTO.Registrar@ontario.ca அல்லது தொலைநகல் மூலம் (416) 326-2199 அல்லது (இலவசமாக): 1-866-355-6099.

*விண்ணப்பம் செய்வதற்கான உதவி*

- மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்
  400 யூனிவசிட்டி அவனியூ, 7வது மாடி, ரொறன்ரோ, ஒன்ராறியோ, M7A 1X8

| | |
|---|---|
| தொலைபேசி எண் (ரொறன்ரோவில்): | 416-314-6266 |
| இலவச தொடர்புக்கான தொலைபேசி எண்: | 1-866-625-5179 |
| தொலை பேசி தட்டச்சு தொடர்பு (ரொறன்ரோ): | 416-314-6651 |
| இலவச தட்டச்சு தொடர்பு: | 1-866-612-8627 |
| கணணித்தளம்: | www.hrlsc.on.ca |

*பெயர்ச்சியிலுள்ள விண்ணப்பங்களுக்கும் நியாயசபையினால் தொடர்பு படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் தொடர்புகொள்ள வேண்டியது*

பற்றீஷியா எம். கிறெனியர், பதிவாளர் பெயர்ச்சி Patricia M. Grenier, Registrar – Transition
ஒன்ராறியோ மனித உரிமை சபை
655 பே வீதி, 14வது மாடி
றொறன்ரோ, ஒன்ராறியோ M7A 2A3

| | |
|---|---|
| தொலைபேசி எண் (றொறன்ரோவில்): | (416) 314-8419 |
| தொலைபேசி எண் (இலவச): | 1-866-598-0322 |
| தொலை பேசி தட்டச்சு தொடர்பு: | (416) 314-2379 |
| தொலை பேசி தட்டச்சு தொடர்பு ((இலவச): | 1-800-424-1168 |
| தொலை நகல்: | (416) 314-87431 |
| ஈ. –மெயில்: | HRTO.Registrar-Transition@ontario.ca |


***மனநோயாளருக்கான உரிமைகளைக் குறித்த கேள்விகளுக்கு?***

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவு செய்து உங்கள் உரிமைகளுக்காக வாதாடுபவரிடமோ அல்லது மனநோயாளரின் உரிமைகளுக்காக வாதாடும் அலுவலகத்தினையோ 1-800-578-2343 என்ற எண்ணில் அழையுங்கள்.